முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1554

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.12.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. கர்மஞான பலம் கொண்ட குருவே
தவசியாக கலியினில் அற்புதம் நடத்துகின்ற
பெருமைமிக்க ஆறுமுக அரங்கனே
பிரணவக்குடில் படைத்த தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 15 ம் நாள், 31.12.2023, ஞாயிற்றுக்கிழமை)
ஆசிதந்து அரங்கன் நீ தருகின்ற தீட்சைவழி
ஆறுமுகன் யான் உலகோர்க்கு ஆற்றலாக இறங்கி
3. அற்புதம் தனை நடத்தி வருகின்றேன்
உலகமெங்கும் வாசி வென்ற ஞானவான்களை
உயர்வாக உருவாக்கும் பொருட்டு
ஆசிதந்து ஆறுமுகன் யான் உன்வழி
4. மக்களுக்கு சக்தியாக மாறி
அவரவரும் தர்ம காரியங்களோடு இனிதே
ஆற்றல்பட ஞானவானாய் மாற
அறிவிப்பேன் கலியுகத்தில் வாய்ப்புத் தருகின்றேன்
5. தருகவே அரங்கன் உந்தன் பிரணவக்குடில் நாடி
தரணியோர் அறம் பயின்று
வரம் தருகின்ற அன்னதான சேவையை
வழிமொழிந்து உலகமெல்லாம் தர்மமாக்கி செய்தால்
6. செய்திட உலகோர்க்கு ஞான சித்தி
சிறப்பறிவு கூடி இனிதேஇனிபிறவா பேறு
மறுப்பின்றி அரங்கன் உன் தயவாலே
மண்ணுலகில் உன் தர்மத்தாலே நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–